யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

சாவகச்சேரி

# நிறுவுனர் நினைவுப் பேருரை

05.02.2007

**கலாநிதி (திருமதி) அனுஷ்யா சத்தியசீலன்**

[B.A (Hons), M.Phil (Ed), Ph.D (Ed)]

சிரேஷ்ட விரிவுரையாளர்,

கல்வியியற்றுறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம்

# புதிய கலைத்திட்டச் சீராக்கமும் இடைநிலைக்கல்வியும்

# New Curriculam Reforms and Intermediate Educations


**கலாநிதி (திருமதி) அனுஷ்யா சத்தியசீலன்**

[B.A (Hons), M.Phil (Ed), Ph.D (Ed)]

சிரேஷ்ட விரிவுரையாளர்,

கல்வியியற்றுறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம்

## புதிய கலைத்திட்டச் சீராக்கமும் இடைநிலைக்கல்வியும்

### முன்னுரை

ஒரு நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் முக்கிய காரணியாகக் கல்வி விளங்குகின்றது. கல்வியூடாக ஒரு மனிதன்,

(1) அறிவு, திறன் கொண்டவன், (2) பல்வேறு தேர்ச்சிகளைப்பெற்றவன்,
(3) சுயகட்டுப்பாடு உடையவன், (4) பண்பட்டவன்,
(5) சுமுகமான பேச்சுக்கு ஊடாகத் தொடர்பாடலை மேற்கொள்ளக் கூடியவன்,
(6) சமூகப்பொருத்தப்பாடு உடையவன், (7) உலகப்பார்வை கொண்டவன்

என்றவாறான விருத்திகளைப் பெறமுடியும். கல்வியானது தனிமனித விருத்தி, அதனூடாகச் சமூகவிருத்தி பின்னர் தேசஅபிவிருத்தி என அபிவிருத்திக்கான தனது எல்லையை விசாலித்துச் செல்கின்றது. கல்வியின் மேற்கூறப்பட்ட நோக்கங்களை முடிந்தவரையில் அடைவதற்கு உதவும் ஊடகமே பாடசாலைக் கலைத்திட்டமாகும். கலைத்திட்டம் என்பதற்கான விளக்கங்கள் பலவாறாக இருந்தாலும் அதனைப் பின்வருமாறு சுருக்கமாக வரைவிலக்கணப் படுத்த முடியும்.

"பாடங்கள், பாடப்பரப்புக்களினூடாக அறிவையும், அனுபவத்திறனையும், பண்பாட்டு விழுமியங்களையும் மாணவர்கள் பெற உதவுவதும், பிள்ளைகளை முரண்பாடற்ற ஆளுமை உடையவர்களாக, சூழலுக்கும் தமக்குமிடையே ஏற்படக்கூடிய மாற்றங்களுக்கேற்பத் தம்மைச் சீராக்கிக் கொள்ளக்கூடியவர்களாக, நல்ல குடிமக்களாக உருவாக்க உதவுவதும் கலைத்திட்டம் ஆகும்." **(இந்தியக் கல்விச்சிந்தனையாளர் J.கிருஷ்ணமூர்த்தி)**

கலைத்திட்டத்தினூடாகவே கல்வியின் நோக்கங்கள் எய்தப்பட முடியும் என்ற நிலையில் கலைத்திட்டம் பற்றிய ஓரிரு அம்சங்களைக் கருத்திலே கொள்ளுதல் இங்கு பொருத்தமானது. அந்த வகையில் கலைத்திட்ட மாற்றங்களில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் அல்லது இன்னோர்வகையில் கூறுவதானால் கலைத்திட்ட மாற்றத்திற்கான தேவைகள் எவையெவை என்பதனை இங்கு சுருக்கமாக அட்டவணைப்படுத்துவோம்.

**அவையாவன.**

01. குடித்தொகை மாற்றங்கள் (The Demographic Changes)

02. அறிவுப்பரம்பல் அல்லது சீற்றம் (The Knowledge Explosion)

03. தொழில் நுட்பம்சார் புதிய மாறுதல்கள் (Technological Innovation)

04. வாழ்க்கைச்சூழல் மாற்றங்கள் (Ecological Changes)

05. கற்றல் - கற்பித்தல் தொடர்பான புதிய புரிந்துணர்வுகளும் அணுகு முறைகளும் (New Understanding about Learning and Teaching)

06. தகவற் தொழிநுட்பப் பயன்பாடு ( Use of Mass Media )

07. கலாசாரப் பரவல் ( Cultural Diffusion )

இவற்றுள் ஒரு சிலவோ, பலவோ கலைத்திட்ட மாற்றங்களை நிர்ணயிக்கின்றன. அத்தகைய மாற்றங்கள் அவசியமானவையுங்கூட. கலைத்திட்டம் அசைவற்றிருக்கின்றது, நிலையாக இருக்கின்றது என்று கூறப்படுமேயாகில் அக்கலைத்திட்டம் பொருந்தாக் கலைத்திட்டமாக, பயனில் கலைத்திட்டமாகவே இருக்க முடியும். ஏனெனில் மேற்கூறப்பட்ட தேவைகள் காலத்திற்குக் காலம் மாற்றமடையக்கூடியன. அதற்கேற்பக் கலைத்திட்டம் மாற்றம் காணவேண்டியது அவசியமானதும், வரவேற்கப்படத்தக்கதுமாகும். ஆயினும் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் கலைத்திட்ட மாற்றத்தை நிர்ணயிக்கும் ஒருகாரணியாக அரசியல் அமைந்துவிடுவதும், விளைவுகள் சரியாக அடையாளம் காணப்பட முன்னர், அளவிடப்பட முன்னர் அவசர அவசரமாக மாற்றங்கள் இடம் பெறுதலென்பதும் துரதிருஷ்டவசமானது.

## இலங்கையில் கலைத்திட்ட மாற்றங்கள்-வரலாற்று நோக்கும் போக்கும்

இந்தவகையிலேயே சிலகாரணிகள் அல்லது பலகாரணிகள் நிமித்தம் (சில சந்தர்ப்பங்களில் அரசியல் மாற்றங்கள்) இலங்கையில் காலத்திற்கு காலம் கலைத்திட்ட மாற்றங்கள் இடம்பெற்றுள்ளமையை நாம் அறிவோம். இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து (1948) இற்றை வரையிலாகப் பல்வேறு கல்விச் சீர்திருத்தங்கள் (கல்வித்திட்டமிடல், கல்வி நிறுவனங்கள் அவற்றின் வகைப்பாடு, கல்வி நிர்வாகம், கல்வி மேற்பார்வை, கற்பித்தல் - கற்றல் நடைமுறைகள், கல்விச் செலவு, பாடசாலைக் கட்டமைப்பு, வளப்பகிர்வு, ஆசிரியர்கள் பயிற்சியும் கல்வியும் போன்றன யாவும் இதனுள்ளடங்கும்.) முழுமையாகவோ, பகுதியளவிலோ இடம்பெற்றுள்ளன. ஆயின் இங்கு நாம் கலைத்திட்டச் சீர்திருத்தங்களை மட்டும் கருத்திற்கெடுத்துக் கொள்வோமாயின் அக்கலைத்திட்டச் சீர்திருத்தங்களிலான

சில பொதுப்பண்புகளின் அடிப்படையில் சில காலகட்டங்களாக அவற்றை வகைப்படுத்த முடியும். அவை பின்வருமாறு :-

I. 1948 – 1971 வரையிலான காலகட்டம் → இங்கு சுதந்திரம் பெற்ற புதிய அரசொன்றில் காலத்திற்குக்காலம் எழுப்பப்படும் பிரச்சினைகளுக்கும், அழுத்தங்களுக்கும் முகம் கொடுக்கும் வகையிலும், புதிய தேசிய அரசொன்றின் நலன்களுக்கு இசைவான வகையிலும் மாற்றங்கள் அவ்வப்போது இடம்பெற்றன. ஆயினும் அக்காலப் பகுதியிலான மாற்றங்கள் சில பொதுப் பண்புகளைக் கொண்டிருந்ததின் அடிப்படையில் அவற்றினை ஒருகாலப்பகுதிக்குள் அடக்கமுடியும். அந்த வகையில் அக்கால கலைத்திட்ட மாற்றங்கள் பின்வரும் பொதுப்பண்புகளைக் கொண்டிருந்தமையை அடையாளம் காணமுடியும்.

(1) கலைத்திட்டமானது நூல்சார் அறிவுக்கு முதன்மையளித்தமை, அறிவு விருத்தியை மட்டும் கருத்திற் கொண்டமை.

(2) தொழில் வாழ்க்கையோடிணைந்த பாடங்களில், செயற்பாடுகளில் அக்கறை காட்டப்படாமை (அவ்வப்போது சில முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் வெற்றியில்லை.)

(3) விவசாய, கைத்தொழில் துறைகளில் ஈடுபட்ட மக்கள் தொகுதியின் தேவைகள், கருத்தில் எடுத்துக் கொள்ளப்படாமை.

(4) கலைத்திட்டமானது நாட்டின் பொருளாதார விருத்திக்கு உதவக்கூடிய ஆளணியினரை உருவாக்க ஏற்றவாறாக அமையாமையும் கல்வி விரயமாகியமையும்.

(5) இடைநிலைக் கல்வி முடித்துப் பல்கலைக்கழக அனுமதி பெறத் - தவறியவர்களுக்கான தொடர்கல்வி, தொழிற்கல்வி வாய்ப்புக்கள் அக்கால கலைத்திட்ட மாற்றங்களினூடாகப் போதிய அளவில் இடம்பெறாமை.

அக்கால கல்வி பற்றிய டட்லி சியர்ஸின் அறிக்கை (1971) "பொருளாதார விருத்தித் தேவைகளுக்குப் பொருந்தாத ஆட்களை உற்பத்தியாக்கும் கலைத்திட்டமே இந்நாட்டில் இருந்தமையானது கல்வியிலான முதலீட்டை விரயமாக்கியது" என்று கூறியிருந்தமை இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது.

II. 1972 – 1998 வரையிலான காலகட்டம் → 1972இல் இலங்கை குடியரசாகியது. அக்காலப்பகுதியில் சுதந்திரமும் இறையாண்மையும் கொண்ட தேசத்தின் கட்டுமானத்திற்குப் பொருத்தமான கல்விச் சீர்திருத்தங்கள் இடம்பெற்றன. அவற்றுள் “கல்வியின் புதிய பாதை” (1972) “கல்விச் சீர்திருத்தத்திற்கான ஆலோசனைகள்” (1981) என்பன குறிப்பிடத்தக்கன. ஆயினும் அக் கலைத்திட்ட மாற்றங்களிலும் சில பொதுவான இயல்புகளை நாம் காணமுடிந்தது. அவையாவன :

(1) கலைத்திட்டமானது கல்வியின் நூல்சார் தன்மையினை ஓரளவில் மாற்றியமைத்து தொழில் வாழ்க்கையோடிணைந்த கல்விக்கு வழிகாட்டியமை (1972 - முன் தொழிற்படிப்பு I, II ( Pre Vocational Studies) அதில் முன் தொழிற்படிப்பு I அறிமுறைப்பாடமாகவும் முன் தொழிற்படிப்பு II செயன்முறைப் பாடமாகவும் இடம்பெற்று இருந்தது. 1981இல் முன்தொழில் படிப்பிற்குப் பதிலாக வாழ்க்கைத்திறன் (Life Skills) என்பதாக மாற்றம் பெற்றது.

(2) கலைத்திட்டப் பாடங்களினூடாக அறிவு கலை, விஞ்ஞானம் எனக் கூறுபோடப்படும் தன்மை நீக்கப்பட்டமை (ஒன்றிணைந்த சமூகக்கல்வி, விஞ்ஞான பாடங்கள் ஊடாக சாத்தியமாக்கப்பட்டமை)

(3) சமூகக்கல்வி வரலாறு பாடத்தினூடாக தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் பேணப்பட வழி காணப்படுவதாகக் கூறப்பட்டமை (இது எந்தளவில் சாத்தியமாயிற்று என்பது கேள்விக்குரியது.)

(4) எழுத்துப் பரீட்சைக்கும் தேர்வுக்கும் முதன்மையளிக்கும் நிலைப்பாடு ஓரளவேனும் மாற்றப்பட்டு அறிவு, திறன் விருத்திக்கு வழிகாண முயற்சிக்கப்பட்டமை.

(5) உயர்கல்வி வாய்ப்பினைப் பெறத்தவறியவர்கள் தொழில்நுட்பம், கவின்கலை, வர்த்தகம் என்பவற்றுக்குரிய கனிஷ்ட கல்லூரிகளில் சேர்வதற்கான தொடர் வாய்ப்பினை கலைத்திட்டம் வழங்கியமை. 1981இன் கல்விச்சீர்திருத்த ஆலோசனைகள் முன்னர் இருந்த கலைத்திட்டங்கள் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தமையும் இங்கு கருத்திற்கொள்ளத் தக்கது. “ தேர்வுகளுக்கு மிகையான அழுத்தம் கொடுக்கப்பட்டதால் கல்வியின் உள்ளடக்கம் வளங்குன்றி வறிதாகி

விட்டது. கலைத்திட்ட இணைப்பாடவிதான முயற்சிகளின் வாயிலாக வரும் பெறுபேறுகள் சுருங்கி விட்டன. உச்சியை அடைய நிகழும் பூசலுக்கே முதலிடம் கொடுக்கப்படுவதால் அதனை அடைய இயலாத பெரும்பாலானோரின் தேவைகள் புறக்கணிக்கப் பட்டிருக்கின்றன."- எழுத்துப் பரீட்சை மூலம் சோதிக்கப்படும் விடயங்களில் கவனம் செலுத்தப்படுகின்றதேயொழிய உள்நாட்டு நிலைமையில் உள்ளடக்கம், செய்முறைப் பாடங்கள் கவனத்திற் கொள்ளப்படவில்லை."

III. 1998 – 2006 வரையிலான காலகட்டம் → 1972, 1981 கலைத்திட்ட மாற்றங்களினூடான எதிர்பார்ப்புகள் குறிப்பிட்டத்தக்களவிலும், பொருத்தமானதாகவும் இடம்பெறவில்லை. அதனை 1990 இன் இளைஞர் விவகாரம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு பின்வருமாறு கோடிட்டுக் காட்டியிருந்தது. "1972, 1981 களில் முன்தொழில் படிப்பு, வாழ்க்கைத்திறன் என்ற பாடங்கள் கலைத்திட்டத்தில் புகுத்தப்பட்ட போதிலும் தொழிலின் மகத்துவத்தைப் பேணுதல், வேலையுலகிற்கு மாணவர்களை அறிமுகம் செய்தல் என்பனவற்றிலான ஆர்வம் போதியதாக இருக்கவில்லை." அத்தகைய குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டதன் காரணமாகக் கல்வியின் அனைத்து அம்சங்களிலும் சீர்திருத்தங்கள் அக்காலப் பகுதிகளில் இடம்பெற வேண்டும் என்ற நிலைமை உருவாயிற்று. 1991இல் நிறுவப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கு அமைய பொதுக்கல்விக்கான கொள்கைகள் 1995இல் உருவாக்கப்பட்டன. அதனை நடைமுறைப்படுத்துவதற்கென ஒரு செயற்பணிக் குழு (Task Force) அமைக்கப்பட்டது. அக்குழுவினருக்கு உதவுவதற்கென 12 நுட்பவியற் குழுக்களும் அமைக்கப்பட்டன. 1997 ஆம் ஆண்டு "கல்விச் சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்புக்கான" ஆண்டாக ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டது. 1998இல் அளவில் கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பக்கல்விக்கான சிர்திருத்தங்கள் தொடக்கப்பட்டு நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்கப்பட்டன. 1999 இல் தரம் 6இல் தொடங்கி இடைநிலை மட்டக்கலைத்திட்டச் சீராக்கம் மேற்கொள்ளப்பட்டது. 2006இன் இறுதிவரை அதுவே நடைமுறையிலிருந்தது.

அங்கு இடைநிலைக்கல்வி மட்டமானது மூன்று பிரிவுகளாக்கப்பட்டது.

1. கனிஷ்ட இடைநிலைக்கல்வி (தரம் 6 - 9)
2. சிரேஷ்ட கல்வி - சாதாரணதரம் (தரம் 10 - 11)
3. சிரேஷ்ட கல்வி - உயர்தரம் (தரம் 12 - 13)

அக்கல்வி மட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்ட சீர்திருத்தங்களானவை பின்வரும் காலங்களில் பாடசாலைகளில் அமுல்செய்யப்பட்டன.

| ஆண்டு | தரம் |
|---|---|
| 1999 | 6 |
| 2000 | 7 |
| 2001 | 8 |
| 1999 | 9 |
| 2000 | 10 |
| 2001 | 11 |

அங்கு கனிஷ்ட இடைநிலைமட்ட (தரம் 6–9) பாடத்தெரிவுகளை நோக்கின் அவை ஒன்பது பாடங்களைக் கொண்டிருந்தன. அவ்வயாவன:- தாய்மொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், சமூகக்கல்வியும் வரலாறும், வாழ்க்கைத்திறன்கள், சமயம், அழகியற்கலை, சுகாதாரமும் உடற்கல்வியும் என்பனவாகும். பின்னர் தரம் 6இல் விஞ்ஞானமும் சமூகக்கல்வியும் என்பது சுற்றாடற்கல்வி என்ற பாடமாயிற்று. அவற்றுடன் பிள்ளைகள் விளையாட்டின் போதும் ஏனைய செயற்பாடுகளின் போதும் தாய்மொழியுடன் ஏனைய தேசிய மொழிகளையும் பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படுவர் எனவும் குறிப்பிடப்பட்டது. அங்கு ஆங்கிலத் தேர்ச்சி பெறுவதற்கும், பாடசாலை முறைமைக்கும் தொழிற்பயிற்சி முறைமைக்கும் தொடர்புகள் ஏற்படுத்துவதற்கும் வழிகாணப்பட்டது. அதன் மூலம் மாணவர்கள் பொதுக்கல்வித்துறையில் முன்னேறிச் செல்ல அல்லது தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்விமுறையை நாடிச் செல்ல வழி காணப்பட்டது. அன்றியும் தரம் 9 இன் முடிவில் விளைத்திறன் காண் பரீட்சையொன்று (கனிஷ்ட பள்ளிக்கூட தேர்ச்சித்தேர்வு) நடத்தப்பட்டு பெறுபேறுகளுக்கேற்ப தொழில் வழிகாட்டல்களும் மேற்கொள்ளப்பட்டன.

சிரேஷ்ட கல்வி சாதாரணதரம் 10, 11 தரங்களை உள்ளடக்குவதாக இருந்தது. அங்கு பாடங்கள் மையப்பாடங்களாகவும், விருப்புப் பாடங்களாகவும் வகைப்படுத்தப்பட்டன. மையப்பாடங்களாகத் தாய்மொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், சமூகக்கல்வியும் வரலாறும், சமயம், அழகியற்கல்வி (சித்திரம், நடனம், நாடகமும் அரங்கக்கலையும், இலக்கியம்) தொழில்நுட்பப்பாடம் (விவசாயம், தோட்டக்கலை, விலங்கு வேளாண்மை, கடல் உயிரியல் தொழில்நுட்பம்) போன்றன இடம்பெற்றன. விருப்புப் பாடங்களாக வரலாறு, சுகாதாரமும் உடற்கல்வியும், புவியியல், அபிவிருத்திக்கல்வி, இலக்கியம் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்/அரபு) ஒரு நவீன அல்லது பேரிலக்கிய மொழி (இலத்தீன், பிரெஞ்ச், சமஸ்கிருதம், மலே, அரபு), இரண்டாவது மொழியாக (சிங்களம்/தமிழ்) இடம்பெற்றன. எட்டு மையப்பாடங்களுடன் இரண்டு விருப்புப் பாடங்களையும் மாணவர் கற்க வேண்டியதாயிற்று. கணிதம், விஞ்ஞான பாடங்களில் இருமட்டங்களிலான இரு வினாத்தாள் முறைமை உருவாக்கப்பட்டது. கணித விஞ்ஞான பாடங்களை அடிப்படையாகக் கொண்டு உயர்கல்வியைத் தொடரவிரும்பும் மாணவர்களுக்கான ஒரு வினாப்பத்திரமும் வேறுதுறைகளில் செல்லவிரும்பும் மாணவர்களுக்கான ஒரு வினாப்பத்திரமும் என இரு வகை வினாப்பத்திரங்கள் இவ்விரு பாடம் பொறுத்தும் இடம் பெற்றன.

சிரேஷ்ட கல்வி உயர்தரமானது 12,13 தரங்களை உள்ளடக்கியதாக அமைந்தது. ஒவ்வொரு துறைபொறுத்தும் மாணவன் கற்க வேண்டிய பாடத்தொகை மூன்றாகியது. (முன்னர் இவை நான்காக இருந்தன) இம்மாற்றமானது மாணவர் பாடச்சுமையைக் குறைப்பதாக அமைந்தது. இங்கு பொது சாதாரண பத்திர வினாத்தாள் ஒன்றும் இடம்பெற்றது. அவ்வினாத்தாள் பொது விழிப்புணர்வு, பிரச்சினைகளைத தீர்க்கும் ஆற்றல், தர்க்க ஆற்றல், தகவல் தொழில்நுட்பத் திறன்கள் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு வடிவமைக்கப் பட்டது. இது தவிர பொது ஆங்கிலப்பாட (General English) அறிமுகமும் இடம்பெற்றது. அக்கலைத்திட்டமானது பின்வரும் இயல்புகளைக் கொண்டிருந்தது.

அவையாவன :-

(1) பிள்ளையிடமான பல்வேறு தேர்ச்சிகளை வளர்த்தல், (மாறிவரும் உலகில் குறிப்பாக வேலையுலகில் திறமையாகச் செயற்பட உதவுதல்

(2) பிரயோக, மற்றும் தொழில்நுட்பத் திறன்கள் அபிவிருத்தி செய்யப்பட உதவுதல்.

(3) பிள்ளை பௌதீக மற்றும் சமூகச் சூழலுடன் இணைய வழிகாணுதல், படைப்பாற்றலை வளர்த்துக்கொள்ளல், விமர்சன, தர்க்கரீதியான சிந்தனைகளை வளர்த்துக்கொள்ள உதவுதல்.

(4) சமூகக்கல்வி பாடத்தினூடாகத் தேசிய ஐக்கியம், ஜனநாயகம், பால் சமத்துவம், மனித உரிமைகளைக் கட்டியெழுப்புதல்.

(5) மாறிவரும் உலகின் துரித மாற்றங்களுக்கு ஏற்ற வளர்ச்சியை மாணவர்பால் ஊட்டுதல்.

1998 வரை நடைமுறையில் இருந்த கலைத்திட்டம் பற்றிய ஒரு கருத்தினை கவனத்திற் கொள்ளுதலும் பொருத்தமானதாகும் "பொதுவாக இலங்கையின் கல்விச் செயற்பாடுகளிலும், கலைத்திட்டத்திலும் பல்வேறு போதாமைகளும் மட்டுப்பாடுகளும் கண்டறியப்பட்டுள்ளன. நாளாந்த வாழ்க்கையில் எழும் நெருக்கடிகளுக்கும், பிரச்சினைகளுக்கும், அறைகூவல்களுக்கும் முகம் கொடுக்கும் திறன் கலைத்திட்டச் செயன்முறைகளால் வளர்த்தெடுக்கப்படவில்லை. கற்றவர்கள் தாம் யார் என்பதை அறியாதிருக்கிறார்கள். தமது ஆற்றல்களை இனங்கண்டு வெளிப்படுத்த முடியாதிருக்கின்றனர்" (Daily News 16.12.1998) எனவே மேற்சுட்டப்பட்ட குறைபாடுகளைக் களைவதாகவே 1999இன் புதிய கல்விச் சீர்திருத்தம் அமையுமென எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் இச்சீர்திருத்தத்தில் சுட்டிக்காட்டப்பட்ட இயல்புகள் ஏற்கனவே 1972இன் சீர்திருத்தத்தில் இடம்பெற்றிருந்தன என்றும் குறிப்பிடப் பட்டது. அதனால் இச்சீர்திருத்தமானது "1972இல் புகுத்தப்பட்ட கலைத்திட்ட பண்புகள் கொண்ட புதிய கலவை" என்று வர்ணிக்கப் பட்டது. இருப்பினும் அவற்றின் நடைமுறைச் செயற்பாடுகள் எதிர்பார்த்த அளவு வலுவான மாற்றங்களை இடைநிலைக்கல்வி பொறுத்து ஏற்படுத்தவில்லை என்பதனை இடைக்கால மீளாய்வு ஒன்று சுட்டிக்காட்டியது. பிள்ளையிடமான திறனாய்வு மனப்பாங்கு, ஆக்க சிந்தனை, பல்வேறு திறன்கள், சுயசீர்மியம் என்பவைகள் புதிய கலைத்திட்ட மாற்றங்களினூடாக வளர்த்தெடுக்கப்படவில்லை என்ற விமர்சனம் இடம்பெற்றது. அதனடிப்படையில் இடைநிலைக் கல்வி பொறுத்து 2007இல் நடைமுறைப்படுத்தக்கூடியதான கலைத்திட்டச் சீராக்கம் உருப்பெற்றது.

IV. 2007 கலைத்திட்டச் சீராக்கம் → இங்கு கலைத்திட்டச் சீராக்கம் எனும் பொழுது பாடங்கள் பாடத்தெரிவு, எதிர்பார்க்கப்படும் அனுகூலங்கள் என்பனவே கருத்திற் கொள்ளப்படுகின்றன. பாடங்களையும், பாடத்தெரிவினையும் நோக்குவோமேயாகில் 2007இல் முறையே தரம்-6இல் தொடங்கிய சீராக்கமானது 2008இல் தரம் - 7, 2009இல தரம் - 8, 2010இல் தரம் - 9 என அறிமுகப்படுத்தப்படும். அதே போன்று 2007இல் தரம் - 10 தொடங்கி 2008இல் தரம் - 11இல் அறிமுகப்படுத்தப்படும் . 2007இன் புதிய பாடத்திட்டத்தினுடனான பொதுத்தராதர சாதாரண பத்திரப் பரீட்சை (G.C.E.O/L) 2008இல் முதன்முறையாக நடைமுறைப்படுத்தப் படும். பின்வரும் அட்டவணை ஊடாக அதனை நோக்குவோம்.

| ஆண்டு | தரம் - 6 | தரம் - 7 | தரம் - 8 | தரம் - 9 | தரம் - 10 | தரம் - 11 |
|---|---|---|---|---|---|---|
| 2007 | பு.பா | பா.பா | பா.பா | பா.பா | பு.பா | பா.பா |
| 2008 | பு.பா | பு.பா | பா.பா | பா.பா | பு.பா | பு.பா |
| 2009 | பு.பா | பு.பா | பு.பா | பா.பா | பு.பா | பு.பா |
| 2010 | பு.பா | பு.பா | பு.பா | பு.பா | பு.பா | பு.பா |
| (பா.பா → பழைய பாடத்திட்டம் )<br>(பு.பா → புதிய பாடத்திட்டம் ) | | | | | | |

மூலம் :- சுற்றறிக்கை, கல்வியமைச்சு – 2006.

தரம் 6 – 9 கனிஷ்ட இடைநிலைக்கல்வியில் இடம்பெறும் பாடங்களாக சமயம், தாய்மொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும், அழகியல், பிரயோக மற்றும் தொழில்நுட்பத் திறன்கள், சுகாதாரமும் உடற்கல்வியும், இரண்டாம் மொழி என்பவை இடம்பெற்று நூலகப் பயன்பாடு என்பதற்கான பாடவேளையும் ஒதுக்கப்படும். முன்னர் (தரம் - 6 இல் ) ஒன்றிணைக்கப்பட்டுக் கற்பிக்கப்பட்டு வந்த சுற்றாடற் கல்விப் பாடமானது தனித்தனிப் பாடங்களாக கற்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இரண்டாம் மொழி எனுமிடத்து தமிழ் மாணவர்களுக்கு சிங்களத்தையும், சிங்கள மாணவர்களுக்குத் தமிழையும் கற்பிப்பதாக இருக்கும்.

தரம் - 10, 11 சிரேஷ்ட இடைநிலை சாதாரண தரத்தை நோக்கின் இங்கு பாடங்கள் மையப்பாடங்கள் என்றும் (Core Subjects), தெரிவுப்பாடங்கள் (Optional Subjects), என்றும் வகைப்படுத்தப்படும். மையப்பாடங்களாக சமயம்,

சிங்களம் / தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு இடம்பெறுகின்றன. தெரிவுப்பாடங்கள் மூன்று தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. தெரிவுப்பாடங்களின் முதலாவது தொகுதியில் (இதற்குள் அடங்கும் பாடங்கள் குறிப்பிடத்தக்களவில் அறிசார் மொழிசார் பாடங்களாக உள்ளன) புவியியல், குடியியலும் ஆட்சியும், முயற்சியாண்மைக் கற்கைநெறி செம்மொழிகளும் நவீனமொழிகளும், இரண்டாம் மொழி என்பன இடம் பெற்றுள்ளன.

இரண்டாவது தொகுதியில் (இத் தொகுதியுள் அடங்குவன அழகியல்சார் பாடங்களாக உள்ளன.) சங்கீதம் (மேலைத்தேய / கீழைத்தேய) சித்திரம், நடனம், நாடகமும் அரங்கியலும் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) இலக்கியம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) இடம் என்பனவாகும்.

மூன்றாவது தொகுதியில் (இதற்குள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப்பாடங்கள் இடம்பெற்றுள்ளன.) தகவல் தொடர்பாடலும் தொழில் நுட்பமும், விவசாயமும் உணவுத் தொழில் நுட்பமும், கடற்தொழிலும், உணவுத் தொழில்நுட்பமும், ஆக்கத்திறனும் தொழில்நுட்பமும், கலை, மனைப்பொருளியல், சுகாதாரமும் உடற்கல்வியும் தொடர்பாடலும் ஊடகத்துறையும் என்பன இடம் பெற்றுள்ளன.

இங்கு ஒருமாணவன் மையப்பாடங்களுடன் தெரிவுத்தொகுதி ஒவ்வொன்றிலும் இருந்து தனது தேவை, விருப்பு, ஆற்றலுக்கு ஏற்ப தெரிவு செய்த கொண்ட ஒவ்வொரு பாட அடிப்படையிலுமாக 3 பாடங்களையும் சேர்த்து எல்லாமாக 9 பாடங்களை கற்கவேண்டியவனாகின்றான்.

தரம் 12, 13 இடைநிலை சிரேஷ்ட உயர்மட்டத்தை நோக்கின் இங்கு சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஏற்கனவே உள்ளவாறு 3 பாடத் தெரிவுமுறை ஏற்கனவே உள்ள பாடத்துறைகளில் இருந்து தெரிவு செய்யப்படும் கலை, வணிக பாடத்துறை சார்ந்தோருக்கு இந்த வருடத்தில் தொழில்நுட்பப்பாடங்கள் சில அறிமுகப்படுத்தப்படும் அவ்வாறு அறிமுகப்படுத்தப்படும் பாடங்களாவன : Agro Technology, Civil Technology, Bio Resource Technology, Mechanical Technology, Food Technology என்பனவாகும். மேலும் ஆங்கிலம் (General English) கட்டாய பாடமாக்கப்படும்.

பொது சாதாரணப் பத்திரம் (General Common Paper) பல்வேறு திறன்களை உள்ளடக்கிய வினாப்பத்திரமாக இடம்பெறும்.

மேற்கூறப்பட்ட வகையில் பாடங்களும், பாடத்தெரிவுகளும் இடம்பெற இக் கலைத்திட்டச் சீராக்கத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் அனுகூலங்கள் பற்றி சிறிது நோக்குவோம்.

எதிர்பார்க்கப்படும் அனுகூலங்கள் - ஒரு பார்வை

(1) இக்கலைத்திட்டமானது "தேர்ச்சி மையக் கலைத்திட்டம்" (Competence based Curriculum) என்பதாக வர்ணிக்கப்பட்டுள்ளது. கனிஷ்டஇடைநிலை சிரேஷ்டஇடைநிலை (சாதாரண உயர்தரங்கள்) பாடங்கள் பாடத்தெரிவுகள் ஊடாக ஒரு மாணவன் பல்வேறு திறன்கள் தேர்ச்சிகளைப் பெறமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு "தேர்ச்சி" என்பதற்கான வரைவிலக்கணங்களைச் சிறிது நோக்குவோம். தேர்ச்சி என்றால் "திறன் மிக்க பொருத்தமான சரியான தகைமைகள்" (Webster Dictionary) என்றும், "அறிவு ஆற்றல் நல்ல மனப்பாங்குத் திறன்களை வளர்த்தல்" ( International Encyclopedia of Education) என்றும் விளக்கம் அளிக்கப்பட்டன. "இலக்கை அடைவதற்கான அறிவு, திறன் ஆகியவைவற்றைச் சரியான முறையில் கையாளும் திறமை என்ற பிறிதோர் விளக்கமும் அளிக்கப்பட்டது. (Quality Education Review Committee of Australia) அவ்வாறே புதிய கலைத்திட்டத்தினூடாகத் தொடர்பாடல் தேர்ச்சிகள், தகவல் தேர்ச்சிகள், சிந்தித்தல் தேர்ச்சி, ஆளிடைத் தேர்ச்சிகள், தனியாள் தேர்ச்சிகள், சூழல்சார் தேர்ச்சிகளை மாணவர் பெறுவர் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது

(2) பல்வகைத் தேர்ச்சிகளைப் பெறுவதனூடாக அறிவு அதனோடிணைந்ததான பல்வேறு செயலாற்றுத் திறன்கள், நல்ல மனப்பாங்கு மாற்றங்கள் என்பனவும் பெறப்படும் என நம்பப்படுகிறது.

(3) மேலும் இக் கலைத்திட்டச் செயற்பாடுகளூடாக பிள்ளை மையக்கல்வி முதன்மைப்படுத்தப்படும் என்பதும் சுயகற்றல், பிரச்சினை தீர்க்கும் ஆற்றல், கற்பனை ஆற்றல் போன்றன விருத்தியாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(4) பல்வேறு ஆற்றல்கள், திறன்கள் பெறப்படுதல் ஊடாக மாணவர் ஆளுமை விருத்தியாக்கப்படும் என்றும் நம்பப்படுகின்றது.

(5) அன்றியும் பல்இனமக்கள் வாழும் இலங்கையில் வரலாறு, இரண்டாம்மொழி கற்பதனூடாக புரிந்துணர்வு, தேசஐக்கியம் கட்டியெழுப்பப்படுதல், புதியதோர் தேசத்தைக் கட்டியெழுப்புதல் என்பவை யாவும் சாத்தியப்படலாம் என்ற நம்பிக்கையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(6) விரைந்து நடைபெறுகின்ற உலகமயமாதல், பல்வேறு வளர்ச்சிகள், சவால்களுக்கு முகம் கொடுக்க எம் பிள்ளைகள் தயாராவர் எனவும் நம்பப்படுகின்றது.

(7) ஆங்கில மொழிக்கான அழுத்தங்கள் கொடுக்கப்படுவதனால் முன்னைய நிலைமைகளைக் காட்டிலும் ஆங்கில மொழித்தேர்ச்சி விரைவுபடலாம் என்ற எதிர்பார்ப்பும் இங்கு உண்டு.

மேற்கூறப்பட்ட அனுகூலங்களின் நடைமுறைச் சாத்தியப்பாடுகள் பறறிய எமது ஐயப்பாடுகளும் இங்கு கவனத்தில் கொள்ளப்படத்தக்கன அந்தவகையில்

(1) கனிஷ்ட, இடைநிலை மட்டத்தில் பாடச்சுமை அதிகமாக வாய்ப்பிருத்தல்

(2) சிரேஷ்ட இடைநிலை மட்டத்தில் வரலாறு மையப்பாடமாக்கப்பட்டுள்ளது எனினும் இங்கு உண்மையான வரலாற்றுத் தகவல்களும், எண்ணக்கருக்களும் வெளிக்கொணரப்படுமா? அல்லது அது தொடர்ந்தும் சிங்கள பௌத்த பெரும்பான்மையினருக்கான முதன்மையை மட்டும் அளிக்குமா? என்பதிலான சந்தேகங்களும் எழுகின்றன. முன்னர் சமூகக்கல்வியும் வரலாறும் என்ற பாடம் இடம் பெற்றபோது சிங்கள பெரும்பான்மையினரின் பெருமைகள் முடிந்தளவில் பேணுப்பட்ட நிலையில் வரலாறு என்ற தனிப்பாடம் எதனைச் சாதிக்கப் போகின்றது?

(3) இக் கலைத்திட்டத்தினூடாகத் தேச ஐக்கியம் பேணப்படுதல் சாத்தியமானது என்று கூறப்படுவதும் பெரும்பான்மைச் சமூகத்துடன் சிறுபான்மைச் சமூகத்தவர் இணைந்து போதல் என்பதனைச் சுட்டுகின்றதா? அல்லது சிறுபான்மைச் சமூகத்தவர் அடையாளங்கள் பேணப்படுதல் என்பதையே உண்மையில் சுட்டி நிற்கின்றதா?

(4) இரண்டாம் மொழி (கனிஷ்ட இடைநிலை) பொறுத்து தமிழ் மாணவர் சிங்களத்தையும், சிங்கள மாணவர் தமிழையும் கற்பதென்பது நடைமுறைச் சாத்தியமானதா? முன்னைய கால வரலாறு போன்று சிறுபான்மையினருக்கு பெரும்பான்மையோர் மொழி கற்பிக்கப்படுதல்

அவசியமேயொழிய பெரும்பான்மையினருக்கு சிறுபான்மையினர் மொழி அவசியமில்லையென்ற பேரினவாதிகளின் சிந்தனை தொடருமா?

(5) மேலும் நாட்டின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் நிலவும் போர்ச்சூழல், இடப்பெயர்வுகள், கடத்தல்கள், கல்விச் செயற்பாடுகளிலான அவ்வப்போதைய இடைநிறுத்தல்கள், மாணவர் இடைவிலகல்கள், பாடப்புத்தகங்களின் போதாமை, உணவுப் பற்றாக்குறை போன்றன யாவும் கலைத்திட்டச் சீராக்கத்தின்மூலம் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை, திறன்களை ஆளுமைகளை, தகைமைகளை பிள்ளைகள் அடைவதற்கு வழிவகுக்குமா? சுருக்கமாகச் சொல்லப்போனால் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் கல்விச் செயற்பாடுகளே ஸ்தம்பிக்கும் நிலையில் பாடச் சீராக்கம் என்பதும் அதன் அனுகூலங்கள் பற்றியதுமான சிந்தனைகள் இப்பிரதேச மாணவர் ஆசிரியரிடையே சாத்தியமானவைதானா என்பது போன்ற கேள்விகள் எழுப்பப்படுவது தவிர்க்கமுடியாதது.

முடிவுரை

இதுவரை நோக்கியவற்றினின்றும் நாம் பின்வருவனவற்றை புரிந்து கொள்ள முடியும். சுதந்திர இலங்கையில் 1948ல் இருந்து ஏறக்குறைய 1998 வரையிலான காலப்பகுதியில் பல்வேறு கலைத்திட்ட மாற்றங்கள் இடம்பெற்ற போதிலும் அவை திருப்திகரமானவையாக அமையவில்லை ஏற்கெனவே முன்னுரையிலே குறிப்பிடப்பட்டதுபோல கலைத்திட்டங்களின் பாடநெறிகள், பாடங்கள், பாடப்பரப்புக்கள் காலத்திற்கேற்ப, சூழலுக்கேற்ப, தேவைகளுக்கேற்ப ஓரளவில் உலகியல் மாற்றங்களுக்கேற்ப மாற்றம் காணவேண்டியது அவசியமாகும். ஆயினும் இலங்கை பொறுத்து கலைத்திட்ட மாற்றங்களுக்கூடாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள், தேவைகள் நிறைவேறவில்லை என்பதும் அவை நிறைவேற்றப்படுவதற்கான நடைமுறைகள் முழுமனதோடு மேற்கொள்ளப்படவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்படத்தக்கது. இங்கு பெறப்படவேண்டிய பல்வேறு திறன்கள் பெறப்படவில்லை, விழுமியங்கள் பேணப்படவில்லை, மானிடப் பண்புகள் அருகியமை, பொருத்தமற்ற நுகர்வு கலாசாரம் ஊடுருவியமை, சமூக கூட்டுப்பொறுப்பு குறைவடைந்தமை, இனத்துவம் கூர்மையாக்கப்பட்டமை ஆகியன கலைத்திட்டக் குறைபாடுகளாகச் சுட்டிக் காட்டப்பட்டன. இவை எல்லாம் மாற்றி அமைக்கப்படும் வகையில் 1999 இலும், 2007 இலும் கலைத்திட்டச் சீராக்கங்கள் இடம்பெற்றுள்ளன ஆயினும்

அவையும் எதிர்பார்த்தளவுக்கு வெற்றிகாணுமா என்பதில் மேற்கூறப்பட்ட ஐயப்பாடுகள் இருக்கவே செய்கின்றன.

1. பாடங்கள், பாட அலகுகளின் அண்மைத் தன்மை (Content should be recent)
2. பாடங்கள், பாட அலகுகளின் உண்மைத்தன்மையும் பொருத்தப்பாடும் (Content should be accurate)
3. உள்ளடக்கும் நிறைவானதாக இருத்தல் (Content should be adequate)

என்பன மூன்றும் எந்த ஒரு கலைத்திட்டத்தினது வெற்றிக்கும் வழிவகுக்கும் அடிப்படை அம்சங்களாகும். இத்தகைய அம்சங்கள் உண்மையிலேயே கருத்தில் கொள்ளப்பட்டு வடிவமைக்கப்பட்டிருப்பின் புதிய கலைத்திட்டதினுடைய நடைமுறைச் சாத்தியப்பாடுகளும் திருப்திகரமானதாகவே இருக்க முடியம்.